09.09.2016

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நெரூர் செல்லும் வழியில் எள் பயிரிட்டுள்ள விவசாயிகள்

நெரூர்: கரூர் மாவட்டத்தில், கடவூர், தரகம்பட்டி, உப்பிடமங்கலம், ஏமூர், அரவக்குறிச்சி, க.பரமத்தி, தென்னிலை, வாங்கல், நெரூர் போன்ற பகுதிகளில் தண்ணீர் அதிகம் இல்லை. இதனால், நிலத்தடி நீரை மட்டுமே நம்பி விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த வாரங்களில் அவ்வப்போது மழை பெய்ததால், விவசாயிகள் தங்கள் நிலங்களை சமன்படுத்தி மானாவரி விவசாயத்துக்கு தயார் படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து, மானாவரி பயிரிடும் விவசாயி நெரூர் கந்தசாமி கூறியதாவது: இங்கு ஓடும் ஆறுகளில் தண்ணீர் இல்லை. வாய்க்கால்கள் வறண்டுள்ளன. வாய்க்கால்கள் தூர்வாராததால் ஆங்காங்கே ஆகாயத்தாமரைகளும், முட்செடிகளும் வளர்ந்துள்ளது. அப்படியே தண்ணீர் வந்தாலும், வாய்க்காலில் தடையின்றி தண்ணீர் வர வாய்ப்பே இல்லை. இருப்பினும், இயற்கையை நம்பி நாங்கள் எங்கள் நிலங்களை சமன்படுத்தி, நிலத்தை உழுது எள், கம்பு, சோளம் போன்றவற்றை விதைத்துள்ளோம். காவிரியில் நீர் வந்தால் நிலத்தடி நீர்மட்டம் உயரும். கிணறுகளில் தண்ணீர் பெருகும். அதை வைத்தும் விவசாயம் செய்து மானாவாரி பயிரை காப்பாற்றி விடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

## பார்த்தீனியம் செடிகள் ஒழிப்பு கள பயிற்சி

கிருஷ்ணராயபுரம்: கிருஷ்ணராயபுரம் யூனியன், மகாதானபுரத்தில் வேளாண்மை கல்லூரி மாணவியருக்கு, வாழைத் தோட்டத்தில் வளர்ந்துள்ள, பார்த்தீனியம் செடிகள் ஒழிப்பு குறித்த களப்பயிற்சி அளிக்கப்பட்டது. திருச்சி, அன்பில் வேளாண் கல்லூரி மாணவியர், களப்பயிற்சியில் பங்கேற்றனர். மகாதானபுரம் உழவர் மன்ற அமைப்பாளர் ஜெயபால் விவசாயி தோட்டத்தில் உள்ள, வாழை சாகுபடி செய்யபட்ட நிலத்தில் வளர்ந்துள்ள, பார்த்தீனிய செடிகள் ஒழிப்பு குறித்து செயல்முறை அளிக்கப்பட்டது. ஒரு லிட்டர் தண்ணீருக்கு, 100 கிராம் உப்பு என்ற விகிதத்தில் தண்ணீர் கலந்து செடிகள் மேல் பகுதியில் நன்கு நனைத்து, கைக்தெளிப்பான் கொண்டு தெளிக்கல் வேண்டும் என, பயிற்சி அளிக்கப்பட்டது. உழவர் மன்ற உறுப்பினர் கலைவாணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வெண்ணமலையில் கால்நடை பயிற்சி முகாம்

கரூர்: கரூர், வெண்ணமலை சைக்கோ அறக்கட்டளை வளாகத்தில், தமிழ்நாடு கால்நடை ஆராய்ச்சி மையம் சார்பில், கால்நடை பயிற்சி முகாம் நடந்தது. நிர்வாக இயக்குநர் கிறிஸ்துராஜ் தலைமை வகித்தார். கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி மற்றும் மடி நோய் தாக்கம், அதன் தடுப்பு முறைகள் குறித்து கூறப்பட்டது. மாடு மற்றும் ஆடு வளர்போர் தனது சிறந்த அனுபவங்களை தொகுத்து, குறும்படத்தின் மூலம் விளக்கப்பட்டது. 40 பயனாளிகளுக்கு, கால்நடைகளுக்கு தேவையான அடிப்படையான மருந்துகள் ஊட்டச்சத்துகள் வழங்கப்பட்டன. கால்நடை ஆராச்சி மைய டாக்டர்கள் விஜயக்குமார், பாரதி உட்பட பலர் பங்கேற்றனர்.

## சொட்டு நீர் பாசன செயல்விளக்கம்

போடி, போடி அருகே பெருமாள் கவுண்டன்பட்டியில் குள்ளப்புரம் விவசாய தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் சார்பில் விவசாயத்தில் சொட்டுநீர் பாசனம் குறித்த செயல்விளக்கம், களப்பயிற்சிக்கான முகாம் நடந்தது. சொட்டுநீர் பாசனம் மூலம் விவசாய உற்பக்தி பெருக்கம், கண்ணீர் வீணாகாமல் செடியின் அடியில் உள்ள வேருக்கு தண்ணீர் விடுவதன் மூலம் உற்பத்தி பெருக்கம் மற்றும் விவசாயத்திற்கு அரசு வழங்கும் மானியம் குறித்து மாணவிகள் கார்த்திகா,

முத்துமணி, வினோதினி, முத்து, அனிகா, ஹேமபிரியா, ராஜகாளீஸ்வரி, ஸ்ரீமதி, கவுரி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

## போதிய பருவ மழை இல்லாததால் சொட்டு நீர் மூலம் மஞ்சள் சாகுபடி

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில், போதிய பருவ மழை இல்லாததால், சொட்டு நீர் பாசனம் மூலம், மஞ்சள் சாகுபடி செய்து வருகின்றனர்.

ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதிகளில், மஞ்சள், கரும்பு, பருத்தி, நெல், வாழை, மக்காச்சோளம் போன்ற பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்கின்றனர். போதிய பருவ மழை இல்லாததால், ஏரி, ஆறு, நீரோடை உள்ளிட்ட நீர் நிலைகள் அனைத்தும் வறண்டு கிடக்கிறது. இதனால், ஆத்தூர் பகுதியில், நெல் சாகுபடி வெகுவாக குறைந்துவிட்டது. இதில், கல்லாநத்தம், துலுக்கனூர், அம்மம்பாளையம், பைத்தூர், நரசிங்கபுரம், ஆத்தூர் பகுதிகளில், வீரிய ரக பருத்தி, மக்காச்சோளம், கரும்பு உள்ளிட்ட பயிர்களுக்கு போதிய பாசனம் வசதி இல்லாததால், சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்தி வருகின்றனர். குறைந்த பாசனத்தில், மஞ்சள் செழித்து வளர்வதுடன், அதிகளவில் மகசூல் கிடைப்பதாக, விவசாயிகள் கூறுகின்றனர்.

## மூன்று கால்களுடன் பிறந்த ஆட்டுக்குட்டி

மல்லசமுத்திரம்: சோமணம்பட்டி அருந்ததியர் தெருவில், மூன்று கால்களுடன் ஆட்டுக்குட்டி பிறந்துள்ளது. வையப்பமலை அடுத்த, சோமணம்பட்டி அருந்ததியர் தெருவைச் சேர்ந்த கூலித் தொழிலாளி சடையன், 65. இவரது மனைவி கருப்பாயி, 60. தம்பதியரின், ஒன்றரை வயது ஆட்டுக்குட்டி, நேற்று மதியம், மூன்று கால்களுடன் ஒரு ஆட்டுக்குட்டியை ஈன்றது. பகுதிவாசிகள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

இதுகுறித்து, சடையன் கூறியதாவது: ஆட்டுக்குட்டி, மூன்று கால்களுடன் பிறந்திருப்பது ஆச்சரியமாக உள்ளது. கால்நடை மருத்துவர்களின், ஆலோசனையின்படி ஆட்டுக்குட்டியை பாதுகாப்பாக வளர்ப்பேன். இதுபோல், பிறந்திருப்பது இதுவே முதல்முறையாக உள்ளது. இந்த ஆட்டுக்கு வயல்வெளியில்

உள்ள புற்கள், கொடிகள், தீவனத் தட்டுகள் ஆகியவற்றையே உணவாக அளித்தோம். இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ.3 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல், என்.சி.எம்.எஸ்.,ல், 200 பருத்தி மூட்டைகள், மூன்று லட்சம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டன. நாமக்கல் மற்றும் சுற்று வட்டார பகுதிகளான பரமத்தி, திருச்செங்கோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பகுதிகளில், 2,500 ஹெக்டேர் பரப்பளவில், பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், நாமக்கல் என்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரம் தோறும் வியாழக்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வரப்படும். நேற்று நடந்த ஏலத்தில், ஆர்.சி.ஹெச்., குறைந்தபட்சம், 5,432 ரூபாய், அதிகபட்சம், 6,226 ரூபாய், சுரபி ரகம் குறைந்தபட்சம், 5,387 ரூபாய், அதிகபட்சம், 5,912 ரூபாய்க்கும் விற்பனையானது. மொத்தம், 200 மூட்டைகள், மூன்று லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

## விதை பரிசோதனை செய்து பயிர் செய்ய வேண்டுகோள்

ஊட்டி, : விதையின் தரம் அறிந்து பயிர் செய்திட வேண்டும் என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் லாவண்யா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் விதையின் தரம் அறிந்து பயிர் செய்திட வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் விளையும் மலைக் காய்கறிகளின் முளைப்புத்திறன் மற்றும் புறத்தூய்மை சீராக இருக்கும் பட்சத்தில் மட்டுமே அதிகமான மகசூலை தரும். பட்டாணி 75 சதவீதம் முளைப்புதிறனும், 98 சதவீதம் புறத்தூய்மையும் இருத்தல் வேண்டும். இதே

போல், பிரஞ்சு பீன்ஸ் 75, 98 சதவீதமும், முட்டைகோஸ் 70, 98 சதவீதமும், காலிபிளவர் மற்றும் புருக்கோலி ஆகியவை தலா 65, 98 சதவீதமும் இருத்தல் வேண்டும். கேரட் முளைப்புத்திறன் 60 சதவீதமும், புறத்தூய்மை 95 சதவீதமும், முள்ளங்கி 70, 98 சதவீதமும், பீட்ரூட் 60, 96 சதவீதமும், டர்னிப் 70, 98 சதவீதமும், காப்சிகம் 60, 98 சதவீதமும், ஸ்பினாச் 60, 96 சதவீதமும் இருத்தல் வேண்டும். விதை பரிசோதனை முடிவுகள் 7 நாட்களில் உங்கள் முகவரிக்கே வழங்கப்படும். விதை பரிசோதனை கட்டணம் ரூ.30 மட்டுமே. எனவே, விவசாயிகள் விதை பரிசோதனை செய்து பயிர் செய்திட வேண்டும்.

**கூலிக்கு மாடு பிடித்து ஏர்பூட்டி கடலை விதைப்பு பணியில் விவசாயிகள் வேளாண்துறை உதவ வலியுறுத்தல்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த மழையை கொண்டு மானாவரி பயிராக வேர்கடலை விதைக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த பணிக்கு மாவட்ட வேளாண் துறை உதவ முன் வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக வெயில் வாட்டி வதைத்தது. இதனால் கிணறு மற்றும் போர்வெல் உதவியுடன் விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகள் போதுமான தண்ணீர் கிடைக்காததால் பெரும் இழப்பை சந்தித்து வந்தனர். குறிப்பாக ஆலங்குடி, கீரமங்கலம், விராலிமலை, அன்னவாசல், கந்தர்வகோட்டை, கீரனூர் சுற்று வட்டார பகுதியில் உளுந்து, பாசி பயிறு, கடலை உள்ளிட்ட மானாவாரி பயிர்களுக்கு காலத்திற்கு ஏற்றவாறு போதிய தண்ணீர் கிடைக்காததால விவசாயிகள் மிகுந்த மனவேதனையடைந்தனர். கடந்த சில நாட்களாக புதுக்கோட்டை மாவட்டத்தின் அனைத்து பகுதியிலும் பரவலாக நல்ல மழை பெய்தது. இதனால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் தரிசாக கிடந்த நிலங்களை சுத்தப்படுத்தி உழவு பணிகளை மேற்கொண்டனர்.

தற்போது கடந்த இரண்டு நாட்களாக நல்ல வெயில் அடித்ததால் நிலத்தின் ஈரப்பதம் குறைந்து விதைகள் வளர ஏற்றவாறு நிலத்தின் ஈரம் உள்ளது. இதனை பயன்படுத்தி விவசாயிகள் வேர் கடலை விதைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக அன்னவாசல், இலுப்பூர், கீரனூர், ஆவூர், பேராம்பூர், லட்சுமணன்பட்டி, ராப்பூசல் ஆகிய பகுதிகளில் வேர் கடலை விதைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இயந்திரங்கள் கிடைக்காத விவசாயிகள் மாடுகளை

கொண்டு ஏர் பூட்டி விதைப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் பெண் விவசாயிகள் கடலை விதையை ஒன்றொன்றாக போட்டு செல்ல ஏர் ஓட்டும் விவசாயி விதைகளை மண் மூடும் வகையில் நெருக்கமாக உழவு பணியை செய்வார்கள். இந்த பணியில் ஒரு சில குடும்பந்தில் உள்ள அனைவரும் ஈடுபட்டுள்ளனர். ஒரு சிலர் கூலிக்கு ஆட்களை பிடித்து விதைப்பு பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

**சம்பா சாகுபடி திட்ட விழிப்புணர்வு கூட்டம்**

திருவெறும்பூர், : திருவெறும்பூர் அருகே உள்ள தேனீர்பட்டியில் வேளாண்துறை சார்பில் சம்பா சாகுபடி திட்டம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. சென்னை வேளாண் மை துணை இயக்குநர் கிங்ஸ்டன் தலைமை வகித் து நேரடி நெல் விதைப்புக்கான காரணம் மற்றும் நேரடி நெல் விதைப்பு முறை, அதற்கு அரசு வழங்கும் மானிய திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தார். பின்னர் நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு நெல் விதைகளை வழங்கினார். பிரதம மந்திரியின் பசல் பீம யோஜனா பயிர் காப்பீடு திட்டம், அதை கிராம அளவில் செல்படுத்தும் முறை, அதன் முக்கியத்துவம் குறித்து வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) சரவணன் எடுத்துரைத்தார். மேலும் புதிய நெல் ரகங்களான கோஆர் 50, ஏடிடி 49 ஆகிய நெல் ரகங்களின் சிறப்பு பற்றி பேசினார். இந்த முகாமில் தேனீர்பட்டியை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். முன்னதாக வேளாண் உதவி இயக்குநர் (பொ) செல்வராணி வரவேற்றார். வேளாண் உதவி அலுவலர் புவனேஷ்வரி நன்றி கூறினார்.

**நுண்ணீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு**

தஞ்சை, : நுண்ணீர் பாசனம் அமைக்க விவசாயிகளிடம் இருந்த விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக கலெக்டர் அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சிறு, குறு விவசாயிகள் காய்கறி பயிர்களுக்கு 2.5 ஏக்கர் மற்றும் மற்ற பயிர்களுக்கு 5 ஏக்கர் வரை இலவசமாக நுண்ணீர் பாசனம் அமைத்துக்கொள்ளலாம். மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. நடப்பு ஆண்டில் பொது பிரிவு விவசாயிகளுக்கு ரூ.245.56 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் இந்த திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.69.26 கோடி நிதி தனியாக ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 921 ஏக்கர் பரப்பளவில் ரூ.253.68 லட்சம் மானியத்தில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. நுண்ணீர் பாசனம் செய்ய விரும்பும் விவசாயிகள் ரேசன் கார்டு நகல், சிட்டா அடங்கல், நிலவரை படம், சிறு, குறு விவசாயிகளாக இருந்தால் அதற்கான தாசில்தாரிடம் இருந்து பெற்ற சான்று ஆகிய ஆவணங்களுடன் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அல்லது வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகி பயன் பெறலாம் என்று கலெ க்டர் தெரிவித்துள்ளார்.

**மல்லிகை கிலோ □220 : தோவாளையில் பூக்கள் விலை சரிவு**

ஆரல்வாய்மொழி : கன்னியாகுமரி மாவட்டம் தோவாளையில் உள்ள பூ மார்க்கெட்டிற்கு மாவட்டத்தின் பல பகுதிகள் மற்றும் வெளி மாவட்டங்கள், மாநிலங்களில் இருந்தும் பல வகையான வண்ண மலர்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. தோவாளை மார்க்கெட்டில் பூக்களின் விலை விநாயகர் சதுர்த்தி, ஓண கொண்டாட்டங்கள் மற்றும் சுபமுகூர்த்த தினங்களையொட்டி கடந்த சில நாட்களாக ஏற்றத்துடன் காணப்பட்டது. இந்நிலையில் நேற்று தோவாளை பூ மார்க்கெட்டிற்கு வெளியூர்களில் இருந்து பூக்கள் வரத்து அதிகமாக இருந்தது. இதனால் பூக்கள் விலை திடீரென சரிந்தது. அதேவேளை ஓணக்கொண்டாட்டங்களில் அதிகமாக பயன்படுத்தப்படும் கலர் பூக்களின் தேவை அதிகரிப்பால் விலைசற்று அதிகரித்தது.

நேற்று முன்தினம் கிலோ 400 ரூபாய்க்கு விற்கப்பட்ட மல்லிகைப்பூ நேற்று 220 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பிச்சி □550ல் இருந்து □350 ஆகவும், முல்லை □400ல் இருந்து □200 ஆகவும், தோவாளை அரளி □100ல் இருந்து □80 ஆகவும், சேலம் அரளி □150ல் இருந்து □100 ஆகவும், சம்பங்கி 200ல் இருந்து □300 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது. கனகாம்பரம் □500ல் இருந்து □800 ஆகவும், ெகாழுந்து □60ல் இருந்து □80 ஆகவும், மரிக்கொழுந்து □100ல் இருந்து □120 ஆகவும், வாடாமல்லி □30ல் இருந்து □100 ஆகவும், மஞ்சள் கேந்தி □30ல் இருந்து □60 ஆகவும், ஆரஞ்சு கேந்தி □30ல் இருந்து □70 ஆகவும், பட்டன் ரோஸ்□100ல் இருந்து □120 ஆகவும்,பாக்கெட் ரோஸ்

☐15ல் இருந்து ☐20 ஆகவும், ஸ்டெம்ப் ரோஸ் ☐120ல் இருந்து ☐180 ஆகவும்,கோழிப்பூ ☐40ல் இருந்து ☐80 ஆகவும் விற்கப்பட்டது.